# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 147/2016**

திரு. பானுமதி (P.W. –1) **4.10.2024.**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. அருணாச்சல கவுண்டருக்கு இரண்டு மகன்கள் சின்னசாமி கெட்டிமுத்து ஆகியோர் என்றால் சரி. சின்னசாமிக்கு கோவிந்தசாமி சண்முகசுந்தரம் என்று இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றால் சரி. சின்னசாமிக்கு இரண்டு மகன்கள் என்றால் சரி. கோவிந்தசாமியின் வாரிசுதாரர்கள் தான் வாதிகள், 2,3 பிரதிவாதிகள் என்றால் சரி. எனக்கும் பார்வதிக்கும் இடையே விரோதம் இல்லை என்றால் சரி. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு சட்ட அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. 20.5.1988 ஆம் தேதி 1ம் பிரதிவாதி தனக்காகவும் 3 ம் மைனர் பிரதிவாதிக்காக 4ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரையா ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரி. அந்த விபரங்கள் வில்லங்கச் சான்றிதழ் போட்டு பார்த்த போது தான் தெரியவந்தது.

2. வில்லங்கச் சான்றிதழ் நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு தாக்கல் செய்துள்ளோம். 20.5.1988 கிரையாவணத்தில் சொத்துக்கள் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்தக் கிரைய ஆவணத்தின் காலை எண் என்ன என்றால் 279/80 ஆகும். எந்த கிராமம் என்றால் முப்பண்டபாளையம் வீரபாண்டி கிராமம். 12.7.2017 ஆம் தேதி 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதி பெயரில் ஒரு தான செட்டில்மெண்ட் பாத்திரத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றால் தெரியாது. வில்லங்கச் சான்றிதழ் போட்டு பார்த்து உள்ளீர்களே என்றால் தாவா தாக்கல் செய்யும்போது தான் பார்த்தோம். அந்தச் சொத்தை 5 ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் தெரியாது. மேலே சொன்ன

ஆவணங்களை ரத்து செய்யும்படி எந்த பரிகாரமும் தாவாவில் நான் கேட்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஆவணத்தின் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் மாற்றம் ஏற்பட்டு உள்ளது எங்களுக்கு சொத்தில் உரிமை இல்லாததால் தான் அதை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. காலை எண்.280 ல் எத்தனை உட்பிரிவு ஏற்பட்டு உள்ளது என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது. 1988 ஆம் வருடமே காலை எண். 280 உட்பிரிவு ஏற்பட்டு 280/1, 280/2 என்று உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான்காம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற்ற தேதியில் சுவாதீனத்திலிருந்து 5ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்றபோது சுவாதீனம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தவறு. அவர் தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லை.

3. ஆராப்பள்ளிவாரி தாவா சொத்தை கிரயம் பெற்ற தேதியில் இருந்து தனிப்பட்ட சுவாதினத்திலிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சண்முகசுந்தரம் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரி. அவர் எனக்கு என்ன உறவு என்றால் சிறிய தகப்பனார் அவர் திருமணம் செய்து கொள்ளாமல் இறந்து போனார் என்றால் சரி. அதனால் என்னுடைய சித்தப்பாவின் சொத்துக்கள் என் தகப்பனார் கோவிந்தசாமிக்கு பாதிக்கப்பட்டது என்றால் ஆமாம். இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 146/2005 நிலுவையில் இருந்து நடந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் தனிப்பட்ட சுவாதினத்தில் ஆறாம் பிரதிவாதி இருந்து வருகிறார் கூட்டு சுவாதினத்தில் நாங்கள் இல்லை என்றால் சரியல்ல. கூட்டு சுவாதீனத்தில் உள்ளதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் என் அப்பாவின் பெயரில் உள்ளது. தாவா சொத்து 1988 ஆம் வருடம் விற்பனை செய்து விட்டதால் தாவா சொத்தில் எங்களுக்கு உரிமையோ பாத்திமா இல்லை என்றால் தவறு. 1988 ஆம் வருடம் ஏற்பட்ட கிரயங்களை மறைத்து பொய்யான தாவா தாக்கல் செய்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.10.04 10:50:35 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.